## யூலை- 06 - வியாழன்

### தூய மரிய கொரெற்றி

### ”அன்பு உறவு வழி செயலாற்றும் நம்பிக்கை ஒன்றே இன்றியமையாதது”

### முதல் வாசகம் : தொடக்க நூல் 22 : 1-19

இந்நிகழ்ச்சிகளுக்குப் பின், கடவுள் ஆபிரகாமைச் சோதித்தார். அவர் அவரை நோக்கி, ஆபிரகாம்! என, அவரும் ”இதோ! அடியேன்” என்றார்.அவர், ”உன் மகனை, நீ அன்பு கூரும் உன் ஒரே மகனான ஈசாக்கை அழைத்துக்கொண்டு மோரியா நிலப்பகுதிக்குச் செல். அங்கு நான் உனக்குக் காட்டும் மலைகளில் ஒன்றின் மேல் எரிபலியாக அவனை நீ பலியிடவேண்டும்” என்றார்.அவ்வாறே ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து தமது கழுதைக்குச் சேணமிட்டு, தம் வேலைக்காரருள் இருவரையும் தம் மகன் ஈசாக்கையும் அழைத்துக் கொண்டு எரி பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை வெட்டிய பின், கடவுள் தமக்குக் குறிப்பிட்டிருந்த இடத்தை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.மூன்றாம் நாள் ஆபிரகாம் கண்களை உயர்த்தி அந்த இடத்தைத் தூரத்திலிருந்து பார்த்தார்.உடனே ஆபிரகாம் தம் வேலைக்காரர்களை நோக்கி, ”நீங்கள் கழுதையோடு இங்கேயே காத்திருங்கள். நானும், பையனும் அவனிடம் சென்று வழிபாடு செய்தபின் உங்களிடம் திரும்பி வருவோம்” என்றார்.பின் ஆபிரகாம் எரி பலிக்கு வேண்டிய விறகுக் கட்டைகளை எடுத்துத் தம் மகன் ஈசாக்கின் மீது வைத்தார். நெருப்பையும் கத்தியையும் தம் கையில் எடுத்துக் கொண்டார். இவ்வாறு இருவரும் சேர்ந்து சென்றனர்.அப்பொழுது, ”அப்பா!” என, அவர், ”என்ன? மகனே!” என்று கேட்டார். அதற்கு அவன், ”இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?” என்று வினவினான்.அதற்கு ஆபிரகாம், ”எரிபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பொறுத்த மட்டில், கடவுளே பார்த்துக்கொள்வார் மகனே” ”என்றார். இருவரும் சேர்ந்து தொடர்ந்து நடந்தனர்.ஆபிரகாமுக்குக் கடவுள் குறிப்பிட்டுச் சொல்லிய இடத்தை அவர்கள் அடைந்தனர். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடம் அமைத்து அதன்மேல் விறகுக் கட்டைகளை அடுக்கி வைத்தார். பின் தம் மகன் ஈசாக்கைக் கட்டி, பீடத்தின் மீதிருந்த விறகுக் கட்டைகளின் மேல் கிடத்தினார்.ஆபிரகாம் தம் மகனை வெட்டுமாறு தம் கையை நீட்டிக் கத்தியைக் கையிலெடுத்தார்.அப்பொழுது ஆண்டவரின் தூதர் வானத்தினின்று ”ஆபிரகாம்! ஆபிரகாம்” என்று கூப்பிட, அவர் ”இதோ! அடியேன்” என்றார்.அவர், ”பையன்மேல் கை வைக்காதே் அவனுக்கு எதுவும் செய்யாதே் உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை என்பதிலிருந்து நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என்று இப்போது நான் அறிந்து கொண்டேன்” என்றார்.அப்பொழுது ஆபிரகாம் தம் கண்களை உயர்த்திப் பார்த்தார். இதோ, முட்செடிகளில் கொம்பு மாட்டிக்கொண்டு நின்ற ஓர் ஆட்டுக்கிடாயைக் கண்டார். உடனே ஆபிரகாம் அங்குச் சென்று அந்தக் கிடாயைப் பிடித்துத் தம் மகனுக்குப் பதிலாக எரி பலியாக்கினார்.எனவே, ஆபிரகாம் அந்த இடத்திற்கு ”யாவேயிரே” என்று பெயரிட்டார். ஆதலால்தான் ”மலையில் ஆண்டவர் பார்த்துக் கொள்வார்” என்று இன்றுவரை வழங்கி வருகிறது.ஆண்டவரின் தூதர் ஆபிரகாமை வானத்தினின்று மீண்டும் அழைத்து,”ஆண்டவர் கூறுவது இதுவே! நான் என்மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உன் ஒரே மகனை எனக்குப் பலியிடத் தயங்காமல் நீ இவ்வாறு செய்தாய்.ஆதலால் நான் உன்மீது உண்மையாகவே ஆசி பொழிந்து விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் உன் வழிமரபைப் பலுகிப் பெருகச் செய்வேன். உன் வழிமரபினர் தம் பகைவர்களின் வாயிலை உரிமையாக்கிக் கொள்வர்.மேலும், நீ என் குரலுக்குச் செவிகொடுத்ததனால் உலகின் அனைத்து இனத்தவரும் உன் வழிமரபின் மூலம் தங்களுக்கு ஆசி கூறிக்கொள்வர்” என்றார்.பின் ஆபிரகாம் தம் வேலைக்காரரிடம் திரும்பி வந்தார். அவர்கள் ஒன்று சேர்ந்து பெயேர்செபாவுக்குத் திரும்பிச் சென்றார்கள். அங்கேயே ஆபிரகாம் வாழ்ந்து வந்தார்.

**பதில்பாடல் :** உயிர் வாழ்வோர் நாட்டில் நான் ஆண்டவர்
திருமுன் வாழ்ந்திடுவேன்

### நற்செய்தி : மத்தேயு 9 : 1 – 8

அக்காலத்தில் இயேசு படகேறி மறு கரைக்குச் சென்று தம் சொந்த நகரை அடைந்தார்.அப்பொழுது சிலர் முடக்குவாதமுற்ற ஒருவரைக் கட்டிலில் கிடத்தி அவரிடம் கொண்டு வந்தனர். இயேசு அவர்களுடைய நம்பிக்கையைக் கண்டு முடக்குவாதமுற்றவரிடம், ”மகனே, துணிவோடிரு, உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்றார்.அப்பொழுது மறைநூல் அறிஞர்கள் சிலர், ”இவன் கடவுளைப் பழிக்கிறான்” என்று தமக்குள் சொல்லிக் கொண்டனர்.அவர்களுடைய சிந்தனைகளை இயேசு அறிந்து அவர்களை நோக்கி, ”உங்கள் உள்ளங்களில் நீங்கள் தீயன சிந்திப்பதேன்?”உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன” என்பதா, ”எழுந்து நட” என்பதா, எது எளிது?மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு அதிகாரம் உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்” என்றார். பின்பு அவர் முடக்குவாதமுற்றவரை நோக்கி, ”நீ எழுந்து உன்னுடைய கட்டிலைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப் போ” என்றார்.அவரும் எழுந்து தமது வீட்டுக்குப் போனார்.இதைக் கண்ட மக்கள் கூட்டத்தினர் அச்சமுற்றனர். இத்தகைய அதிகாரத்தை மனிதருக்கு அளித்த கடவுளைப் போற்றிப் புகழ்ந்தனர்.

**தியானம்:** இயேசு, கிறிஸ்தவம் என்ற சமயத்தை உருவாக்கவில்லை .சமயத்தை தாண்டிய மனித நேயம், வழிபாட்டைத்தாண்டிய இறை மனித உறவு ஏற்பட வேண்டும் என்பதே இயேசுவின் இறையாட்சிக் கனவு. அதனால்தான் “யாவே” கடவுளை அப்பா தந்தாய் என அழைக்க நமக்கு கற்றுக்கொடுத்தார். ஆபிரகாம் இந்த உறவு நெருக்கத்தையும் தன்நம்பிக்கையும் முழுமையாக வெளிப்படுத்தி வாழ்ந்ததைக் காண்கிறோம். கடவுள் அவரின் ஒரே மகனைப் பலியாகக் கேட்ட போது தன்னுடைய பிளவுபடாத அன்பு, ஐயம் இல்லாத நம்பிக்கையால் அப்படியே நிறைவேற்றத்துணிந்தார். தாயிடம் குழந்தை கொண்டுள்ள நம்பிக்கை, தலைவனிடம் தலைவி கொண்டுள்ள நம்பிக்கை அன்புறவை அடிப்படையாகக் கொண்டவை. எப்பொழுது நம் வழிபாடு உள்ளன்போடு கூடிய உறவு நிலையாக மாறுகின்றதோ, மன்னிக்கும் பண்பை தொடங்கும் நிலையாக கொண்டுள்ளதோ அன்று தான் இயேசு கனவு கண்ட இறையாட்சி மலரும்.